


**12.12.2022**

## 12. ‘நம்மைத் தனியே விட்டுவிடாத’ தேவனுக்கு ஸ்தோத்திரம்!

இந்த ஆண்டின் பயணத்தை, அக்கரை செல்லும்படி நடத்திய ஆண்டவரின் மகத்துவத்தைப் பாருங்கள் (மாற்கு6:45). பயணத்தில் நாம் ஜெபித்தோம்! அதைவிட மேலாய், நம் பயணத்தின் பாதுகாப்பிற்கு ‘அவரே நமக்காக ஜெபித்தார்’ என காண்பது மேன்மையன்றோ! (வச.46). எதிர்ப்பாய் வந்த பல்வேறு சூழ்நிலைகளின் புயலை கடந்து செல்ல ‘நாம் கஷ்டப்படுவதை’ அவர் கண்டார்! எனவும்.... ‘நடுக்கடலில்’ திக்குத் தெரியா காரிருளில், பாதை உருவாக்கி, கடலின் மேல் நடந்து ‘நம்மிடத்தில் வந்தார்’ எனவும் கண்டது இன்னமும் எத்தனை ஆச்சரியம்! (வச.48). உண்மைதான், ‘‘பிதா, என்னைத் தனியே இருக்க விடவில்லை’’ என இயேசு கூறிய பிதாவின் அதே அன்பை நாமும் பெற்றிருக்கிறோம்! (யோவான்.8:29). நடத்து என்ன? தள்ளாடிய நம் ஜீவிய படகில் அவர் ஏறியவுடன், புயல் அமர்ந்து, இம்மட்டும் நம்மை சுகமாய் அக்கரை சேர நடத்திய தேவனுக்கே ஸ்தோத்திரம்! (வச.51).

– ரத்னம்